(திரு. ம. சின்னசாமி) [1993 பிப்ரவரி 10

3. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980–81 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (வணிகம்) தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் தொடர்பான பத்தி குறித்து பொது நிறுவனங்கள் குழு (1989–90) அளித்த இருபத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைப் பற்றிய எண்பத்தைந்தாவது அறிக்கை.

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77 மற்றும் 1977–78 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளின் (வணிகம்) மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1991–92) முப்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரை மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய எண்பத்தாறாவது அறிக்கை.

5. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் செயல்பாடு குறித்த (1992–93) ஆம் ஆண்டிற்கான எண்பத்தேழாவது அறிக்கை.

6. சட்டமுன் வடிவு (அறிமுகம் செய்தல்.)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் .... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ் நீங்கள் Technical ஆக object பண்ணுகிறீர்களா? அல்லது நான் object பண்ணுகிறேன் என்று மட்டும் சொல்லுகிறீர்களா ?

Thiru S. SUNDARADOSS: Hon. Speaker Sir I oppose the bill at the introduction stage itself.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்.)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. தீர்மானம்.

விதிகள் 36 மற்றும் 37-ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவரின் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் 36 மற்றும் 37 ஆகியவற்றைத் தளர்த்தி, மேற்படி விதிகளில் விதி 95-ன் கீழ் ஓர் அரசினர் தனித் தீர்மானம் கொண்டுவர அனுமதி அளிக்க வேண்டும்"